**முக்கிய உண்மை ஆவணம் (KFD) வாகனக் கடன்கள்**

**மெர்சன்ட் பேங்க் ஒஃப் ஸ்ரீலங்கா என்ட் ஃபைனான்ஸ் பீஎல்சீ**

1. **சேவை – வாகனக் கடன்**

வாகனத்தை அடமானம் வைத்து மோட்டார் வாகனங்களை (அதாவது மோட்டார் கார் அல்லது இரட்டை நோக்க வாகனம்) கொள்வனவு செய்வதில் வாடிக்கையாளர்களுக்கு நிதி உதவியை வழங்குவதே இந்தச் சேவையின் நோக்கமாகும்.

2. **பிரதான பண்புகளும் நன்மைகளும்**

அ) கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

ஆ) குறைந்தபட்ச கடன் வழங்கல் காலம்

இ) 5 ஆண்டுகள் வரை திருப்பிச் செலுத்தும் தவணைகள்

ஈ) துரித வாடிக்கையாளர் சேவை

3. **தகைமை: விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்**

அ) 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 65 வயதுக்கு குறைவான இலங்கை பிரஜைகளாகவிருத்தல்

ஆ) ஏற்றுக்கொள்ளக்கூடிய / நிரூபிக்கப்பட்ட திருப்பிச் செலுத்தும் திறன் உள்ளமை

இ) தெளிவான கடந்த காலப் பதிவு உள்ளமை. (திருப்திகரமான CRIB பதிவுகள்)

ஈ) வசதியின் நோக்கம் சட்டப்பூர்வமாக இருக்க வேண்டும்

4. **வட்டி வீதங்களும் ஏனைய அறவீடுகளும்**

**4.1 வட்டி வீதங்கள்**

வட்டி வீதங்கள் அவ்வப்போது சந்தை நிலவரங்களின் அடிப்படையில் ALCO குழு எடுக்கும் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டவை.

**4.2ஏனைய கட்டணங்கள்**

**4.2.1. ஆவணக் கட்டணங்கள்**

| | |
|---|---|
| ரூபா. 500,000 வரை | 7,500.00 |
| ரூபா. 500,000 - ரூபா. 999,000 | 9,000.00 |
| ரூபா. 1,000,000 - ரூபா. 1,999,000 | 11,000.00 |
| ரூபா. 2,000,000 - ரூபா. 2,999,000 | 12,500.00 |
| ரூபா. 3,000,000 - ரூபா. 4,999,000 | 15,000.00 |
| ரூபா. 5,000,000 இற்கு மேல் | 17,500.00 |

**4.2.2. கட்டணங்கள் - அசையும் சொத்துக்களுக்காக வழங்கப்படும் வசதிகள்**

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட RMV/DMT வாகனப் பதிவுக் கட்டணங்கள் ஏற்புடையனவாகும்.

**4.2.3 மாதாந்த தவணைகளை செலுத்தாத / தாமதமாக செலுத்துவதற்கான அபராத வட்டி (ஏதேனுமிருப்பின்)**

தவணைகள் உரிய திகதிகளில் செலுத்தப்படாமல் இருந்தால், தாமதமான காலக்கட்டத்தில் மாதத்திற்கு மூன்று சதவீதம் (3%) காலாவதியான வட்டி விதிக்கப்படும்.

**4.2.4 வசதியை முன்கூட்டியே செலுத்தித் தீர்த்தல்**

கடன் வாங்குபவரால் முன்கூட்டியே செலுத்தித் தீர்க்கப்பட்டால், வசதியின் எதிர்கால நலனுக்கான சலுகையை வழங்குவது MBSL இன் தனிப்பட்ட விருப்பத்திற்கு உட்பட்டதாகும்.

**4.2.5 ஏற்புடைய ஏனைய கட்டணங்கள்**

| இல. | அறவீடு/கட்டணம் பற்றிய விபரம் | அறவீடுகள்/கட்டணங்கள் (ரூபா) |
|---|---|---|
| 1 | மீதி உறுதிப்படுத்தல் | 1,000.00 |
| 2 | நிலுவைத் தொகை இல்லாமையை உறுதிப்படுத்தும் கடிதம் | 250.00 |
| 3 | வாடிக்கையாளர் மீளச்செலுத்துதல் வரலாறு | 250.00 |
| 4 | நகல் நீக்கல் கடிதங்கள் – அனைத்து வாகன வகைகளுக்கும் | 2,000.00 |
| 5 | ஆட்சேபனையின்மைக் கடிதங்கள் | 1,000.00 |
| 6 | மீதி உறுதிப்படுத்தல் | 1,000.00 |
| 7 | தீர்ப்பனவுக் கடிதங்கள் | 750.00 |
| 8 | கடன் வழங்குபவர்கள் / வாங்குபவர்களுக்கான விலைப்பட்டியல் | 1,500.00 |
| 9 | காசோலை திரும்பல் கட்டணங்கள் | 2,500.00 |
| 10 | காசோலை திரும்பல்கள் – காசோலை வரைந்தவரால் மேற்கொள்ளப்பட்ட பண நிறுத்தல்கள் | 5,000.00 |

**5. பொருளின் வகை, வெளிப்பாடு மற்றும் வழங்கப்பட வேண்டிய பிணையங்கள்**

அ) அசையும் சொத்துக்கள்

உள்ளார்ந்த மதிப்பீட்டு அதிகாரி வழங்கிய சந்தைப் பெறுமதியில் 70% வரை- SM CCD.

ஆ) மோட்டார் கார்களும் இரட்டை நோக்க வாகனங்களுமே பிரபலமான அசையும் பொருட்களாகும்

**6. பின்பற்ற வேண்டிய நடைமுறை**

- சாத்தியமான அனைத்து வாடிக்கையாளர்களும் அருகிலுள்ள கிளைக்கு அழைக்கப்பட்டு அவர்களின் தேவைகளைப் பற்றி கலந்துரையாடுதல்.
- கலந்துரையாடலுக்குப் பிறகு, கிளையானது வாடிக்கையாளரின் தேவையைப் பொறுத்து மீளாய்வு செய்து செயல்முறையைத் தொடங்கும்.
- அங்கீகரிக்கப்பட்ட DOA இன் படி ஒப்புதல் பெறப்படும்

**6.1 தேவையான ஆவணங்கள்**

**6.1.1தனிப்பட்ட வாடிக்கையாளர்கள்**

i. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் / சொத்துகள் பிரகடனப் படிவம்
ii. தேசிய அடையாள அட்டையின் பிரதி
iii. பற்றுச்சீட்டு ஆதாரம்/வதிவிட உறுதிச்சான்றிதழ்
iv. கடந்த 6 மாத வங்கிக் கூற்றுக்கள் (தனிப்பட்ட மற்றும் வணிக)
v. காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்/ வருமான செலவுக் கூற்றுக்கள்
vi. CRIB அறிக்கை (தனிப்பட்ட மற்றும் வணிக)
vii. BR பிரதி (கிடைத்தால்)
viii. பிற வருமான ஆதார ஆவணங்கள்

**6.1.2 பெருநிறுவன வாடிக்கையாளர்கள்**

**வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் / மேற்கோள் காட்டப்பட்ட நிறுவனங்கள்**

i. கூட்டிணைத்தல் சான்றிதழ்
ii. அமைப்பு அகவிதிகள்
iii. 1 ஆம் படிவம் , சமீபத்திய 13ஆம் படிவம், 15 ஆம் படிவம், 20 ஆம் படிவம் ஆகியவற்றின் பிரதிகள்
iv. வரி செலுத்தும் பற்றுச்சீட்டுக்கள்/ வருமான வரி (அண்மைய).
v. சபைத் தீர்மானங்கள்
vi. கடந்த மூன்று வருட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்
vii. நடப்பு ஆண்டு முகாமைத்துவக் கணக்குகள்/காசுப் பாய்ச்சல் கூற்றுகள்
viii. கடந்த 6 மாத வங்கி அறிக்கை
ix. CRIB அறிக்கை (வணிக / பணிப்பாளர்கள்)
x. வேறு ஏதேனும் அவசியமான ஆவணங்கள்.

**6.1.3 அவசியமான ஆவணங்கள் (உத்தரவாதம் வழங்குவோர்)**

i. உத்தரவாதியின் விண்ணப்பம் மற்றும் சொத்துப் பிரகடனப் படிவம்
ii. தேசிய அடையாள அட்டையின் பிரதி நகல்
iii. வருமான அறிக்கைகள் (சம்பள உறுதிப்படுத்தல் கடிதம்/ அண்மைய சம்பள சீட்டுகள்/ வங்கிக் கூற்றுக்கள்)

**6.2 பிணையத்துடன் தொடர்புடைய ஆவணங்கள்- அசையும்**

- பதிவு சான்றிதழின் மூலப் பிரதி
- வாகனத்தின் முழுமையான உரிமை,
- மதிப்பீட்டு அறிக்கை
- விற்பனை விலைப்பட்டியல்

**7. பொது**

- வணிக அமைவிடத்தின் புகைப்படங்கள் (பெயர் பலகையுடன்) மற்றும் பாதுகாப்பு
-ஆய்வு அறிக்கை
- கடன் தேவைக்கான ஆதாரம்

**8. முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

அ) விண்ணப்பதாரிகளுக்கு முன்னறிவித்தலின்றிஅல்லது மெர்சன்ட் பேங்க் ஒஃப் ஸ்ரீலங்கா என்ட் ஃபைனான்ஸ் பீஎல்சீ (MBSL) இனால் கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோரிக்கையின் பேரில் கடன் திருப்பி செலுத்தப்படலாம்.

ஆ) விண்ணப்பதாரர்கள் வாகனத்தின் மீது எந்த அடமானம், உரிமை அல்லது பிற சுமைகளை உருவாக்கவோ அல்லது விளைவிக்கவோ மாட்டோம் என்று உறுதியளிக்க வேண்டும்.

இ) விண்ணப்பதாரரின் வணிக புத்தகங்களை ஆய்வு செய்ய MBSL க்கு உரிமை உண்டு.

ஈ) MBSL இன் அதிகாரிகள், விண்ணப்பதாரரின் வணிக அமைவிடம் அல்லது வசிப்பிடத்திற்குச் செல்ல அதிகாரம் பெற்றவர்கள், நிலுவைத் தொகையை வசூலிக்கும் நோக்கத்திற்காக, அத்தகைய வருகைக் கட்டணங்கள் விண்ணப்பதாரர்களால் ஏற்கப்படும்.

உ) வணிக வளாகம் அல்லது விண்ணப்பதாரர் மற்றும்/அல்லது உத்தரவாததாரர்களின் இருப்பிடத்தை அணுகுவதற்கு MBSL க்கு உரிமை உண்டு. வணிகத்தின் இத்தகைய ஆய்வு விண்ணப்பதாரர் மற்றும்/அல்லது சம்பந்தப்பட்ட உத்தரவாததாரர்களுக்கு முன் அறிவிப்புடன் அல்லது எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் மேற்கொள்ளப்படலாம்.

ஊ) உரியதரப்பினரால் ஒரு வாகனக் கடன் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும், அதில் இவ்வசதிக்குரிய அங்கங்களான அனைத்துத் தரப்பினரும், விதிமுறைகளும், நிபந்தனைகளும் உள்ளடங்கிய ஒப்பந்தக் கடிதமும் நடைமுறைப்படுத்தப்படும்.

எ) வழங்கப்பட்ட வசதியின் மதிப்பீட்டிற்கேற்றவாறு அங்கீகரிக்கப்பட்ட ஒரு காப்புறுதி நிறுவனத்தினூடாக காப்புறுதியை விண்ணப்பதாரி பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அது MBSL ற்கு ஒதுக்கப்படுதல் வேண்டும். மேலும், அக்காப்புறுதியானது வருடாந்தம் வருடாந்தம் புதுப்பிக்கப்பட்டு MBSL இடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மேலே கூறப்பட்டவற்றை மேற்கொள்ளத் தவறும்பட்சத்தில் அதனைப் புதுப்பிக்கும் உரிமையும், கட்டணங்களை விண்ணப்பதாரியின் கடன் கணக்கில் பற்றுவைக்கும் உரிமையும் MBSL நிறுவனத்திற்கே காணப்படும்.

ஏ)மேலே குறிப்பிட்டுள்ள வாகனத்தின் முழு உரிமையாளராக MBSL பதிவு செய்யப்படுவதுடன் MBSL க்கு தேவைப்படும் போது பதிவு செய்யப்பட்ட உரிமையானது MBSL க்கு மாற்றப்படும். விண்ணப்பதாரருக்கு வாகனத்தை வைத்திருக்க உரிமை உண்டு ஆனால் கோரும் போது MBSL க்கு உடைமையை ஒப்படைக்க வேண்டும். MBSL ஆனது எந்த நேரத்திலோ அல்லது இடத்திலோ மேற்படி வாகனத்தை தனக்குத் தேவையானதாகக் கருதும் போதும், தேவைப்படும் போதெல்லாம் MBSL இன் விருப்பத்தின் பேரில் வாகனத்தை கையகப்படுத்தும் உரிமை MBSL ற்கு உண்டு.

**9.முடிவுறுத்தலும் மீட்பும் – சட்ட நடைமுறை**

MBSL ஆனது, இங்குள்ள முந்தையவற்றின் அடிப்படையில் இந்த வசதியை நிறுத்தினால், விண்ணப்பதாரர்/கள் மற்றும்/அல்லது உத்தரவாததாரர்/கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும், முத்திரைக் கட்டணம், சட்டக் கட்டணம் போன்றவை உள்ளடங்கலாக சட்ட நடவடிக்கைகளில் ஏற்படும் அனைத்துச் செலவுகளுடன் MBSL க்கு நிலுவையில் உள்ள பணத்தை ஒன்றாகப் பெறுவதற்காக வழங்கப்பட்ட வாகனத்தை முன்கூட்டியே பறிமுதல் செய்யவும் MBSLக்கு உரிமை உண்டு.

**9.1 ஏற்புடைய சட்ட ஏற்பாடுகள்**

அ) 1946 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க குத்தகைச் சட்டம் திருத்தப்பட்டவாறாக

ஆ)1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம்

இ)ஒப்பந்தச் சட்டம்

ஈ) இலங்கை குடியியல் மற்றும் குற்றவியல் சட்டம்

உ) 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பாதுகாக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம்

ஊ) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டம்

எ) 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுவர் மன்றச் சட்டம்

ஏ) 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைச் சட்டம்

ஐ) 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடன் அறவீட்டுச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

ஒ) 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நம்பிக்கை பெறுகைகள் கட்டளைச் சட்டம்

ஓ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டம்

ஔ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்

**10. முறைப்பாடு கையாளல் செயன்முறை**

வாடிக்கையாளர்கள் பின்வரும் ஏதாவதொரு முறையின் மூலம் எமது பொருட்கள் (products) அல்லது சேவைகள் (services)தொடர்பான முறைப்பாட்டினை மேற்கொள்ளலாம்;

அ) மிகவும் அண்மையிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் முறைப்பாட்டினை மேற்கொள்ளலாம்.

ஆ) எமது வாடிக்கையாளர் சேவை துரித தொலைபேசி இலக்கமாகிய 011 - 4 711 711 இற்கு அழைத்து **அல்லது** info@mbslbank.com / customercare@mbslbank.com எனும் மின்னஞ்சல் மூலம் முறைப்பாட்டினை மேற்கொள்ளலாம்.

இ) பின்வரும் முகவரிக்கு **எழுத்து மூலம் முறைப்பாட்டினை** மேற்கொள்ளலாம்;

**உதவிப் பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் - தயாரிப்பு முகாமைத்துவம், வீடு மனை விற்பனை, வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளல் மற்றும் ஆதரவுச் சேவைகள்**

**மெர்சன்ட் பேங்க் ஒஃப் ஸ்ரீலங்கா என்ட் ஃபைனான்ஸ் பீஎல்சீ**

**இல.28, இலங்கை வங்கி மேர்சன்ட் டவர்**

**சென்ட் மைக்கல்ஸ் வீதி**

**கொழும்பு 03.**